மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கடலாடி.
முன்னிலை: திரு. நா. வெங்கடேசன்,D.C.,B.A.,M.L.,PGDCLCF.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கடலாடி.
2023–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 11ம் நாள் புதன் கிழமை

**I.A.No. 01/2022**
**in**
**O.S. No. 12/2022**

1. அ.சிங்கம் லியோன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. இ.அலங்காரம் பர்னாந்து
2. அ.ஆஸ்டர்
3. அ.யோகேஷ்
4. இ.அருளானந்தம் சிங்கம் பர்னாந்து
5. அ.யோவான்
6. அ.சஞ்சாய்
7. பி.மிக்கேல்
8. பி.இன்னாசி சூசை ராஜா .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 04.01.2023 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.B.பூமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. H.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. K.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், எதிர்வாதங்களையும் கேட்டு மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## உத்தரவு

1) மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள குறியிடப்படாத 2,7 அசல் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை பெற்றுக்கொண்டு 2,7 அசல் ஆவணங்களுக்குப் பதிலாக அதனை Substitute செய்து 2,7 அசல் ஆவணங்களை

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.01.11 15:30:48 +0530

தனது வசம் திரும்பத் தருமாறு உத்தரவு செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் சி.பி.சி. (1908)ஆர்டர் 13 ரூல் 9(1)(b)(a) மற்றும் பிரிவு 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–

தான் இந்த நிர் மனுதார் என்றும் அசல் வழக்கில் வாதி ஆவேன் என்றும் தான் தாவா சொத்தானது தனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தில் தனது அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ எந்தவித தடையிடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராகி சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும் இந்நிலையில் தாவா சொத்துக்கு அருகில் உள்ள சொத்துக்களை பொறுத்து தனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்வதற்கு தான் வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவின் அடிப்படையில் தன் பெயருக்கு சொத்துக்களைப் பொறுத்து பட்டா மாறுதல் செய்வதற்கு வட்டாட்சியர் அவர்கள் மேற்படி சொத்துக்களுக்கான முந்தைய அசல் ஆவணங்களை கேட்டுள்ளதால் தான் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள குறியிடப்படாத 2,7 அசல் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை பெற்றுக்கொண்டு 2,7 அசல் ஆவணங்களை தனக்கு திரும்பத்தர உத்தரவிட வேண்டியது அவசியமாக இருக்கிறது என்றும் இல்லாதுபோனால் தனக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது என்றும் மேலும் சமூகம் நீதிமன்றம் மேற்படி அசல் ஆவணங்களை எப்போது கோரினாலும் அந்த அசல் ஆவணங்களை தான் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வேன் என்று உறுதியளிக்கிறேன் என்றும் ஆகையால் சமூகம் நீதிபதி அவர்கள் மேலான கிருபை செய்து தான் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள குறியிடப்படாத 2,7 அசல் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை பெற்றுக்கொண்டு 2,7 அசல் ஆவணங்களுக்குப் பதிலாக அதனை Substitute செய்து 2,7 அசல் ஆவணங்களை தனது வசம் திரும்பத் தருமாறு உத்தரவு செய்ய வேண்டி மனுதாரர்/ வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.01.11 15:31:05 +0530

வாதி/மனுதார் தரப்பில் தாக்கல் செய்திருக்கும் மனு அபிடவிட்டில் கண்ட சங்கதிகளில் இந்த 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவை உண்மைக்கு மாறானவை என்றும் அவை செல்லாக்கும் தன்மையை இந்த வாதி/மனுதார் தரப்பே கண்டிப்பாய் நிரூபணம் செய்ய வேண்டும் என்றும் வாதி/மனுதார் தரப்பு மனு நிலைநிற்க தக்கதல்ல என்றும் மனுவில் கோரியுள்ள எந்த ஒரு பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்கதக்கதல்ல என்றும் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யதக்கதாகும் என்றும் வாதி/மனுதார் தரப்பு சமூகம் நீதிமன்றத்தில் உண்மையான காரணங்களை துலக்கி உரிய பரிகாரம் கோராமல் பொய்யான காரணங்களை ஏற்றுக்கொள்ள இயலாத விசயங்களை துலக்கி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதார்/வாதி தரப்பு மனு தள்ளுபடி செய்யதக்கதாகும் என்றும் வாதி/மனுதார் தரப்பு மனு அபிடவிட்டின் 3வது பாராவில் கண்ட சங்கதிகளான இந்நிலையில் தாவா சொத்துக்கு அருகில் உள்ள சொத்துக்களை பொறுத்து வாதி/மனுதார் பெயருக்கு பட்டா மாறுதல் செய்வதற்கு வாதி/மனுதார் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளதாகவும் அதன் அடிப்படையில் சொத்துக்களை பொறுத்து பட்டா மாறுதல் செய்ய வட்டாட்சியர் அவர்கள் மேற்படி சொத்துக்களுக்கான முந்தைய அசல் ஆவணங்களை கேட்டுள்ளதாகவும் மேற்படி அசல் ஆவணங்களான குறியீடு செய்யாத 2 மற்றும் 7 ஆவணங்களுக்கு சான்றிட்ட நகல் பெற்றுள்ளதாகவும் அதனை பெற்றுக்கொண்டு தாவா வழக்கில் substitute செய்து அசல் ஆவணங்களை வாதி/மனுதார் வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அசல் ஆவணங்களை சமூகம் கோர்ட்டார் அவர்கள் ஒப்படைக்க சொல்லும் போது ஒப்படைப்பதாகவும் கூறியுள்ள விசயங்களை வாதி/மனுதார் தரப்பே கண்டிப்பாய் நிரூபணம் செய்ய வேண்டும் என்றும் அதில் உண்மையில்லை என்றும் அது வாதி/மனுதார் தரப்பு மோசடி காரணமாகும் என்பதால் வாதி/மனுதாரர் தரப்பு மனு தள்ளுபடி செய்யக்கூடியதாகும் என்றும் எவ்வாறெனில் எந்த ஒரு சொத்திற்கும் பட்டா மாறுதல் செய்ய வருவாய் துறையில் அசல் ஆவணங்களை தாக்கல் செய்ய கோருவது இல்லை என்றும் பட்டா மாறுதல் கோரி தாக்கல் செய்யப்படும் ஆவணங்களின் நகல்களை பரிசோதித்தே பட்டா மாறுதல் செய்யப்படும் என்றும் பட்டா மாறுதல் கோரும் சொத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல் மட்டுமே பரிசீலனைக்கு வட்டாட்சியரால் கோரப்படும் என்றும்

N VENKATESAN Digitally signed by N VENKATESAN
Date: 2023.01.11 15:31:16 +0530

மாறாக பட்டா மாறுதல் கோரும் சொத்திற்கு அருகில் உள்ள சொத்து சம்பந்தமான ஆவணங்கள் வட்டாட்சியரால் கோரப்படுவதுதில்லை என்றும் அதன் அடிப்படையில் மனுதார்/வாதி தரப்பில் மனு அபிடவிட்டில் கூறியுள்ள காரணம் பொய்யானதும் மோசடியானதுமாகும் என்பதால் மனுதார் மனு தள்ளுபடி செய்யக்கூடியதாகும் என்றும் மனுதார்/வாதி தரப்பில் வட்டாட்சியரிடம் தாக்கல் செய்யப்படும் மனுவின் பட்டா மாறுதலுக்கான ஆவணமாக தாக்கல் செய்யப்படும் ஆவணத்தின் உண்மை தன்மையில் ஏதேனும் சந்தேகம் ஏற்படுமாயின் அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல்களை சமர்ப்பித்தாலே போதுமானது என்றும் வட்டாட்சியர் ஒரு நிர்வாக நடுவர் என்பதால் ஆவணம் சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் நன்கு தெரியும் என்றும் அவ்வாறான நிலையில் அவர் அசல் ஆவணங்களை சமர்ப்பிக்கவோ அதனை கேட்டோ எந்த உத்திரவும் பிறப்புவிக்க மாட்டார் என்றும் மனுதார்/வாதி தனது மனு அபிடவிட்டில் தாவா சொத்திற்கு அருகில் உள்ள எந்த சொத்து சம்பந்தமாக பட்டா மாறுதல் மனு கொடுத்துள்ளார் என்றோ அந்த சொத்தானது அவருக்கு பாத்தியமானது என்பது பற்றியோ, அதன் சர்வே எண், பட்டா எண் ஆகியவை குறித்து மனுவில் தெளிவாக குறிப்பிட்டு அதற்கான ஆவணங்களை சமர்பிக்காத நிலையில் மனுதார் மனு நிலை நிற்க தக்கதல்ல என்றும் மனு நிராகரிக்க தக்கதும் தள்ளுபடி செய்ய கூடியதுமாகும் என்றும் மனுதார்/வாதியானவர் தாவா வழக்கு சொத்தினை வீண் வில்லங்கம் செய்யவும் நீதிமன்றத்திற்கு தெரியாமலும் நீதிமன்றத்தின் அனுமதி பெறாமலும் விற்கிரையம் செய்ய முயற்சிப்பதாக இந்த 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி அறிகிறார் என்றும் அதற்காகவே சார்பதிவு அலுவலகத்தில் மேற்படி வழக்கில் கண்ட தாவா சொத்திற்கான ஆவணங்களான 2 மற்றும் 7 ஆவணங்களின் அசலை சமூகம் நீதிமன்றத்தில் இருந்து திரும்ப பெற்று சார்பதிவ அலுவலகத்தில் சமர்ப்பிக்கவோ மனுதார்/வாதி இந்த மனுவினை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதார்/வாதி தரப்பில் கோரியுள்ளபடி மேற்படி ஆவணங்களை வாதி/மனுதார் தரப்பிற்கு வழங்கும் பட்சம் தாவா சொத்தினை வில்லங்கம் செய்து அதன் மூலம் இந்த 1 ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரருக்கு வீண் கஷ்ட நஷ்டம் ஏற்படுத்தி விடுவதுடன் அதன் தொடர்ச்சியாக வழக்கினை கிரையம் பெற்ற நபர்கள் மூலம் வீண் மனுக்களை தாக்கல் செய்து வழக்கினை வீண் இழுத்தடிப்பு செய்துவிடுவார் என்பதால்

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.01.11 15:31:26 +0530

மனுதார்/வாதி தரப்பு மனு நீதியின் பொருட்டு அனுமதிக்க உகந்ததல்ல என்பதால் தள்ளுபடி செய்ய தக்கதாகும் என்றும் ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து வாதி/மனுதார் தரப்பு இந்த மனுவினை இந்த 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பு அதிக பட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கி நீதி வழங்குமாறு 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது.

<u>2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பிலான எதிருரை</u>:-

இதனடியில் நேரடியாக ஒத்துக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபித்துக்கொள்ள வேண்டும் மனுதார்/வாதி இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது வீணாக இந்த மனு, வழக்கு தாக்கல் செய்திருப்பதால் மனுதார்/வாதியின் வழக்கானது இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளின் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் மேலும் மனுதார்/வாதியின் மனுவிலும், பிராதிலும் கண்ட விவரங்கள் உண்மையில்லை என்றும் எனவே மனுதார்/வாதியின் பிராது, இந்த மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் மனுதார்/வாதி இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது வீணாக இந்த மனுவும், வழக்கு தாக்கல் செய்திருப்பதால் மனுதார்/வாதி இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளுக்கு Examplary cost கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும் அபிடவிட்டு பாரா3ல் கண்ட விசயங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்றும் இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளால் முற்றிலும் மறுக்கப்படுகிறது என்றும் இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளின் முன் பாத்தியஸ்தர்களுக்கு நில உடமை மேம்பாட்டுத்திட்டத்தில் பட்டா எண் 728ல் சர்வே எண்கள் 58/2, 142/1A, 142/4, 142/5, 142/6, 163/2B, 230/1A, 231, 235/1, 238/3, 234/4, 250/1A, 278/2A, 278/2B1, 278/1A ஆகிய சொத்துக்களுக்கு கொடுக்கப்பட்டது என்றும் மேற்படி பட்டாவில் கண்ட சர்வே எண் 231 விஸ்தீரணம் 8.82.5 சுமார் 22 ஏக்கரில் மனுதார்/வாதிக்கு 20 ஏக்கர் கிரையம் கொடுக்கப்பட்டு மனுதார்/வாதி சர்வே எண் 231ல் கிரையம் வாங்கிய சுமார் 20 ஏக்கருக்கு மேற்படி சர்வே எண் 231ல் உட்பிரிவு செய்யப்பட்டு 231/3A1 என பட்டா மாற்றம் செய்துள்ளார் என்றும் அதன் பட்டா எண் 1020 ஆகும் என்றும் மேற்படி பட்டா

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.01.11 15:31:36 +0530

எண் 1020 பிராதுடன் 11வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும் சர்வே எண் 231ல் கிரையம் வாங்கிய பத்திரங்கள் அனைத்தும் பிராதுடன் 1 முதல் 8 ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி சர்வே எண்.231ல் மீதமுள்ள சுமார் 2 ஏக்கர் நிலம் இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் பாத்திய, அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் இவ்வாறு உண்மையிருக்க பொய்யான விபரங்களை கூறி சமூகம் கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும் மனுதார்/வாதி கிரையம் வாங்கிய சொத்திற்கு 1020ம் நம்பர் பட்டா மாற்றிய பிறகு இந்த 2,7 ஆவணங்கள் என்ன காரணத்திற்காக தேவைப்படுகிறது என்று உண்மையை கூறாத நிலையில் இந்த அபிடவிட்டு மனுவில் Bonafide Reason கிடையாது என்றும் அந்த வகையில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாய் இருக்கிறது என்றும் மேலும் மனுதார்/வாதி வேறு எந்த சொத்திற்கு மோசடியாக பட்டா மாற்ற எத்தனிக்கிறார் என்பது தெரியவில்லை என்றும் தாவா சொத்திற்கும் மனுதார்/வாதிக்கும் வாதியின் முன்னோர்களுக்கோ எந்த காலத்திலும் பாத்தியமோ, அனுபவமோ இருந்ததில்லை என்றும் சட்டப்படி இருக்கக்கூடியதுமில்லை என்றும் மேலும் சமூகம் கோர்ட்டில் குறியீடு செய்யப்படாத ஆவணங்களை நகல் எடுத்து மீண்டும் தாக்கல் செய்ய இயலாது என்றும் அந்த வகையில் பிராதுடன் தாக்கல் செய்திருக்கும் 2,7 அசல் ஆவணங்களை சட்டப்படி Substitute செய்து கொண்டு கொடுக்க இயலாது என்றும் தேவையென்றால் மேற்படி ஆவணங்களை இணையவழி சேவை மூலம் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து நகல் எடுத்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதை தவிர்த்து இவ்வழக்கை காலதாமத படுத்துவதற்காகவே இம்மனுவை தாக்கல் செய்திருப்பதனால் இம்மனுவை சட்டப்படி தள்ளுபடி செய்ய வேண்டியதாய் இருக்கிறது என்றும் ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து இந்த மனுவை இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் மனுதார்/வாதியின் மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பு செய்ய வேண்டி பிரார்த்திக்கப்படுகிறது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள்

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.01.11 15:31:47 +0530

எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5)இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

தான் இந்த நிர் மனுதார் என்றும் அசல் வழக்கில் வாதி ஆவேன் என்றும் தான் தாவா சொத்தானது தனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தில் தனது அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ எந்தவித தடையிடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராகி சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும் இந்நிலையில் தாவா சொத்துக்கு அருகில் உள்ள சொத்துக்களை பொறுத்து தனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்வதற்கு தான் வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவின் அடிப்படையில் தன் பெயருக்கு சொத்துக்களைப் பொறுத்து பட்டா மாறுதல் செய்வதற்கு வட்டாட்சியர் அவர்கள் மேற்படி சொத்துக்களுக்கான முந்தைய அசல் ஆவணங்களை கேட்டுள்ளதால் தான் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள குறியிடப்படாத 2,7 அசல் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை பெற்றுக்கொண்டு 2,7 அசல் ஆவணங்களை தனக்கு திரும்பத்தர உத்தரவிட வேண்டியது அவசியமாக இருக்கிறது என்றும் இல்லாதுபோனால் தனக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது என்றும் மேலும் சமூகம் நீதிமன்றம் மேற்படி அசல் ஆவணங்களை எப்போது கோரினாலும் அந்த அசல் ஆவணங்களை தான் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வேன் என்று உறுதியளிக்கிறேன் என்றும் ஆகையால் சமூகம் நீதிபதி அவர்கள் மேலான கிருபை செய்து தான் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள குறியிடப்படாத 2,7 அசல் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை பெற்றுக்கொண்டு 2,7 அசல் ஆவணங்களுக்குப் பதிலாக அதனை Substitute செய்து 2,7 அசல் ஆவணங்களை தனது வசம் திரும்பத் தருமாறு உத்தரவு செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பு வாதம் முன் வைக்கப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் தாவா சொத்தில் வீண் வில்லங்கம் செய்ய 2 மற்றும்7 ஆவணங்களை மனுதாரர் பயன்படுத்தி விடுவார் என்றும் வீண் கஷ்ட நஷ்டம் ஏற்படுத்திவிடுவார் என்றும் வீண் மனுக்களை தாக்கல் செய்து வழக்கினை வீண்

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.01.11 15:31:56 +0530

இழுத்தடிப்பு செய்துவிடுவார் என்றும் எதிர்மனுதாரர்களின் எதிர்மனுக்கள் மற்றும் எதிர் வாதத்தினை பார்க்கையில் மனுதாரர் தனது ஆவணங்களை தனது பயன்பாட்டிற்கு தேவை ஏற்பட்டுள்ளது என்றும் நீதிமன்றம் கோரும் போது திரும்ப பெறப்படும் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் முன்னிறுத்துவதாக கூறியுள்ள நிலையிலும் மனுதாரர் கோரும் ஆவணங்களுக்கு சான்றிடப்பட்ட நகல்களை substitute ஆக தாக்கல் செய்வதாக மனுதாரர் கூறியிருப்பதும் மனுதாரர் தனது தரப்பு ஆவணத்தை தேவை ஏற்படும் பொழுது பெறுவதற்கு உரிமை உள்ளதாகவும் மனுதாரர் தரப்பு ஆவணத்தை மனுதாரர் திரும்ப பெறுவதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கூறிய வினா மனுதாரருக்கு ஆதரவாகவும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராகவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 11.01.2023 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2023.01.11 15:32:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2023.01.11 15:32:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
கடலாடி.
சீரான/வரைவு உத்தரவு

IA.No.1/2022
in
OS.No.12/2022
நாள். 11.01.2023